# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:15 வள்ளுவராண்டு 2030 கார்த்திகை 29 புதன்கிழமை (15-12-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:16


## ஷெல் மற்றும் குண்டுச் சத்தங்கள் நேற்றுப் பகல் வேளை தணிவு!

யாழ்ப்பாணம், டிசெ. 15

குடாநாட்டில் கடந்த இரு தினங்களாக நிலவிய பதற்ற நிலை நேற்று ஓரளவு தணிந்திருந்தது. கரையோரப் பகுதிகள் மீது நடத்தப்பட்டு வந்த ஷெல் தாக்குதல்களும் நேற்றுப் பகல்வேளை சற்று ஓய்ந்திருந்தன. எனினும் சண்டை நடைபெறும் பிரதேசங்களை அண்டிய பகுதிகளில் நேற்றிரவு மீண்டும் ஷெல் மற்றும் குண்டுச் சத்தங்கள் தீவிரமடைந்தன.

கரையோரப் பகுதிகளில் ஷெல் தாக்குதல்கள் நேற்று இடைக்கிடையேஇடம்பெற்றதால் அந்தப் பகுதி மக்களிடையே பதற்ற நிலை காணப்பட்டது.

சில பகுதிகளில் இருந்துமக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.

அரியாலை, புங்கன்குளம், கொழும்புத்துறை, குருநகர், கிளாலி, அல்லிப்பளை, புலோப்பளை, மிருசுவில், உசன், தர்மக்கேணி ஆகிய பகுதிகளில் சில இடங்களில் ஷெல்கள் வந்து வீழ்ந்ததால் அந்த இடங்களைச் சேர்ந்த பொதுமக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றதைக் காண முடிந்ததாக உதயனின் பிரதேசச் செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

## ஆனையிறவுப் பகுதியில் நேற்று மோதல்கள்

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 15

ஆனையிறவுப் பகுதியில் நேற்று அதிகாலை முதல் அரச படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே கடல் மற்றும் தரைத்தாக்குதல்கள் இடம் பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது:

தனங்களப்புக்குத் தெற்கே விடுதலைப் புலிகளின் மூன்று வள்ளங்களையும், வெற்றிலைக்கேணிக்கு ஆயுதம் ஏற்றிச்சென்ற இரு உழவு இயந்திரங்களையும் தாக்கி அழித்ததாகவும் மேலும் தெரிவித்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் படைமுகாம் மீது புலிகள் நேற்றுத் தாக்குதல்!

## இருமணி நேரம் கடும் சண்டை

மட்டக்களப்பு, டிசெம்பர் 15

மட்டக்களப்பு மாவட்டம் வகரைப் பகுதியில் அமைந்துள்ள கிருமிச்சை படை முகாம் மீது நேற்று அதிகாலை -30 மணியளவில் புலிகள் பெரும் தாக்குதல் நடத்தினர்.

சுமார் இருமணிநேரம் அப்பகுதியில் கடும் சண்டை இடம் பெற்றதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் இருபடையினரும் அந்த முகாமில் பணியாற்றிய இரு தொழிலாளர்களும் உயிரிழந்ததாகவும்—

16 படையினர் காயமடைந்ததாகவும்—

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

படையினர் மேற்கொண்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்றும் ஸ்தம்பித நிலைமை

தென்மராட்சி, டிசெ. 15

இரண்டாவது நாளாக நேற்றும் சாவகச்சேரி நகரப் பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது. சந்தை, வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

வீதிகளில் வ.பி.போ. சபை பஸ்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் குறைவாகவே காணப்பட்டன.

சந்தைக்கு மரக்கறி வகைகள் வந்த போதிலும் வியாபாரிகள் வராததால் அவை திருப்பிக்கொண்டு செல்லப்பட்டன.

அரச திணைக்கள அலுவலகங்கள் திறந்திருந்தபோதிலும் ஊழியர்கள் வருகை குறைவாகக் காணப்பட்டதால் வேளையுடனே அவை மூடப்பட்டன

இதேவேளை—

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை இடையூறு இன்றித் தொடர்ந்து நடைபெறுகிறது

(ஐ-8-117)

## தென்பகுதி டாக்டர்கள் சென்றனர்

யாழ்ப்பாணம், டிசெ 15

யாழ். ஆஸ்பத்திரி மற்றும் மந்திகை ஆஸ்பத்திரி என்பவற்றில் கடமையாற்றும் தென்பகுதி டாக்டர்கள் 41 பேர் நேற்று விமானம் மூலம் கொழும்பு பயணமாகினர்.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள யுத்தச் சூழ்நிலையை அடுத்து தம்மைத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்கவேண்டும் என இவர்கள் சுகாதார

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தாழையடி தேவாலயத்தில் 65 குடும்பங்கள் தஞ்சம்

யாழ்ப்பாணம், டிசெ. 15

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து தாழையடி தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ள சுமார் 300 பேரைக் கொண்ட 65 குடும்பங்கள் அங்கிருந்து வெளியேற முடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் யாழ். அரச அதிபரின் கவனத்துக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இக் குடும்பங்களை அவர்கள் விரும்பிய இடத்திற்குச் செல்ல உதவுமாறு கோரி வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் எஸ். வேளா

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## 75,000 வாக்காளர் அட்டைகள் வன்னிக்கு அனுப்பப்பட்டன

வவுனியா, டிசெ. 15

வன்னியில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களுக்குரிய வாக்காளர் அட்டைகள் நேற்று அங்கு அனுப்பப்பட்டுள்ளன.

வவுனியா தபால் திணைக்கள அதிகாரிகளின் ஏற்பாட்டில் 19 பொதிகளில் 75 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் நேற்று அனுப்பப்பட்டுள்ளன என்றும் —

இன்று அவை பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவிருக்கின்றன என்றும் —

தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

### வன்னிக்குப் பாதை திறக்கப்பட்டபின்

## 350 பொது மக்கள் நேற்று புலிகளின் பகுதிக்குச் சென்றனர்

வவுனியா, டிசெ. 15

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து வந்து நீண்டகாலமாக வவுனியாவில் நிர்க்கதியான நிலையில் தங்கிநின்ற 350 பொதுமக்கள் நேற்று இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிக்குச் செல்ல ஆயிரத்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்படும் மக்களுக்கு உதவ தயாராக உள்ளோம்

### செஞ்சிலுவைப் பிரதிநிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 15

குடாநாட்டில் உருவாகியுள்ள யுத்தநிலையால் பாதிக்கப்படும் மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ், வதிவிடப் பிரதிநிதி பியர் பேர்னாண்ட் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

தற்சமயம் இடம்பெயர்ந்து மக்கள் தங்கியுள்ள இடங்களுக்கு நேரில் சென்று அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து வருகிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

சாவகச்சேரிப் பகுதிக்குச் செல்வதற்கு இன்னமும் அனுமதி கிடைக்கவில்லை என்றும்

அனுமதி கிடைத்த பின்னர் அங்கு சென்று நிலைமைகளை பார்வையிடவிருப்பதாகவும் –

அவர் மேலும் தெரிவித்தார்.

அதேநேரம்—

யுத்தத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவுவது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அதிகாரிகளும் நேற்று கலந்துரையாடினர்.

### பிரசாரக் கூட்டம்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளரான சந்திரிகாகுமாரதுங்கவுக்கு ஆதரவு கோரி இன்று மட்டக்களப்பில் பிரசாரக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

அமைச்சர்களான மகிந்த ராஜபக்ஷ, ஏ. எச். எம். பௌசி ஆகியோர் இந்தக் கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர். (ஐ-3-21)

### வவுணதீவில் நேற்று முன்தினம்:

## புலிகள்-புளொட் மோதலில் பொதுமக்கள் இருவர் பலி!

மட்டக்களப்பு, டிசெ. 15

மட்டக்களப்பு வவுணதீவில் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் புளொட் அமைப்பினருக்கும்விடுதலைப் புலிகளுக்கும் இடையில்நடந்த மோதல் சம்பவம் ஒன்றில் புளொட் உறுப்பினர் ஒருவர் உட்பட மூவர் உயிரிழந்தனர்.

புளொட் அமைப்பின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் மேலும் 20 பேர் உயிரிழப்பு

வவுனியா, டிசெ. 15

தற்போது நடைபெற்று வரும் 'ஓயாத அலைகள் – 3' நடவடிக்கையின்போது தமது தரப்பில் மூன்று எல்லைப் படை வீரர்கள் உட்பட மேலும் 20 பேர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் நேற்று தமது வானொலி

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

On Your Mark......

ஆயத்தம்......

Set...... Go - X

ஆரம்பம்......

Come......

வருக......

இன்று குதூகலமான ஆரம்பம்!!

தரமான விளையாட்டு உபகரணங்கள்

மலிவு விற்பனை

/மட்டுப்படுத்தப்பட்ட பொருள்களே கைவசமுள்ளன/

▶ ரூபா 100க்கு மேல் பொருள்களை வாங்குவோருக்கு.........

உங்கள் அபிமான கிரிக்கெட் வீரர்களின் படம்

அருண்ஸ்


ஸ்போர்ட்ஸ் ஸ்பொட்

347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/10205)


முடிவில்லாத் துயரில் எம்மை மூழ்கிட வைத்து
மறைந்திட்ட எமது அன்புத் தெய்வத்தின்

## ஓராண்டு நினைவு நாள்



| உயிர்பெற்று வந்தது | துயர் தந்து சென்றது |
|---|---|
| 1948 — 01 — 21 | 1998 — 11 — 27 |

அமரர்

**மாணிக்கம் இலங்கநாதன்**

( மின்கம்பி இணைப்பாளர், இலங்கை மின்சாரசபை )

திதி: 1999 - 12 - 15

எத்தனை இருந்திட்டாலும் எப்படி மற்றவர்கள்
எங்களைத் தேற்றினாலும் ஏதேதோ கூறினாலும்
இத்தரை மரணம் அது இறைவனின் 'நியதி' என்று
சொற்களை அடுக்கி எம் சோகத்தைக் குறைத்திட்டாலும்
உங்களை இழந்ததாலெம் உயிரையே இழந்துவிட்டோம்
எம்மனை வெற்றிடந்தான் நிரப்பிட முடியாதையா!
தங்களை எம் இதயக் கோயிலில் அமர்த்தி எங்கள்
கண்ணிறை தெய்வமாக்க வாருங்கள் வேண்டுகிறோம்.

தங்கள் நினைவோடு வாழும்
மனைவி, பிள்ளைகள்.

66/12, 5 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (71784)

## மரண அறிவித்தல்

### திருமதி இந்திராணி நவரத்தினம்

தொல்புரத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி இந்திராணி நவரத்தினம் 13—12—99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் து. நவரத்தினத்தின் (இளைப்பாறிய கிளை முகாமையாளர், சங்கானை ப. நோ. கூ. ச.) அன்பு மனைவியும் திருமதி ச. விஜித்தா (கனடா), ந. நிமலன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் J/168) ஆகியோரின் அன்புத் தாயாரும் பொ. சசிதரனின் (கனடா) அன்பு மாமியாரும் ச. பிரியங்காவின் (கனடா) பாசமிகு அம்மம்மாவும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பு ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும்,

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
ப. நந்தீஸ்
(பேறாமகன்)

நவாலி கிழக்கு,
மானிப்பாய். (71788)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 12 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

சாவகச்சேரி

(114321ஏ), (114321பி), (126074ஏ).

யாழ்ப்பாணம்

(124608ஏ), (124705ஏ), (126677ஏ), (126677பி), (126677சி), (126677டி), (126904ஏ), (126904பி), (126904சி), (126962ஏ), (1126988ஏ), (126988பி), (127007ஏ), (133329ஏ), (133329பி), (133369ஏ), (133374ஏ), (133374பி), (133376ஏ), (133376பி), (133376சி), (133376டி), (133377ஏ), (133393ஏ), (133393பி), (133416ஏ), (133416பி), (133437ஏ), (133448ஏ), (133448பி), (133477ஏ), (133477பி), (133491ஏ), (133521ஏ), (133586ஏ), (133586பி), (133590ஏ).

நல்லூர்

(133378ஏ), (133378பி),

பளை

(125491ஏ), (125491பி)

(ஐ-க)

## வேலணையில் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 15

வேலணைப் பகுதியில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் தனது வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேலணை கிழக்கு - துறையூரைச்சேர்ந்த சிவகடாட்சம் லிங்கரூபன் (வயது 18) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

இவர் கைது செய்யப்பட்டதற்கான ரீசிது எதுவும் வழங்கப்படவில்லை என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ-5-9)


லிபேட்டி அச்சுவேலி

விஜயசாந்தியின்

கில்லாடி மருமகள்

காட்சிகள்: 10-30, 2 30

T.P.No.070-212223
070 - 212678

(71687)



நாகம்ஸ்

சுன்னாகம்

ரஜனி, ரோஜா நடித்த

உழைப்பாளி

காட்சிகள்:
11-00, 2-30,
(புதிய நேரம்)

(71727)



ராஜா

யாழ்ப்பாணம்

விஜய் - ஷாலினி மற்றும் பலர் நடித்த

காதலுக்கு மரியாதை

10-00, 2-30,

(வி/10120)


## யாழ். கல்விப் பணிப்பாளராக திருமதி மகாலிங்கம் நியமனம்

குருநகர், டிசெ. 15

யாழ் வலயக் கல்விப் பணிப்பாளராகப் பதில் கடமைபுரியும் திருமதி எஸ். மகாலிங்கம் 01—11—99 தொடக்கம் யாழ். வலயக் கல்விப் பணிமனையின் கல்விப் பணிப்பாளராக வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது நியமனக் கடிதம் யாழ். வலயக் கல்விப் பணிமனைக்கு நேற்று முன்தினம் கிடைத்துள்ளது. இவர் இலங்கை கல்வி நிர்வாகச் சேவை வகுப்பு II ஐச் சேர்ந்தவராவார்.

யாழ். வலயக்கல்விப் பணிப்பாளராக இதுவரை கடமைபுரிந்து அமெரிக்காவிற்கு விடுமுறையில் சென்றுள்ள கலாநிதி எஸ். என். தணிகாசலம் பிள்ளையின் இடத்திற்கு இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(ஐ-51)


கோழிக்குஞ்சு விநியோகம்

38 நாள்களில் வளர்ச்சியடையும்

German Breed, Lohmann Broiler

17ம் திகதி விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்தவர்களும் அன்று பெற்றுக்கொள்ளலாம்.

தேவையானோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

K. ஜெயக்குமார்

72. A. நக்கா றோட், யாழ்ப்பாணம்.

தொலைபேசி :2597 (71792)


## கண்ணீர் அஞ்சலி

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின்
முதலாம் வருட உடற் கல்விப் பிரிவு ஆசிரியப் பயிலுநர்

**சுப்பிரமணியம் ஜெகதீஸ்வரன்**

(குருக்கள்மடம், மட்டக்களப்பு)

அவர்களின் அகாலமரணச் செய்தியை அறிந்து மிகுந்த வேதனை அடைவதோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம.

சக ஆசிரியப் பயிலுநர்கள்,
தேசிய கல்வியியற் கல்லூரி,
வவுனியா.

(71793)

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் தர்மகுலசிங்கம் கோமகன்

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட தர்மகுலசிங்கம் கோமகன் கனடாவில் அகால மரணமானார்.

இவர் தர்மகுலசிங்கம் - பவானி (விவாகப் பதிவாளர், கனடா) தம்பதிகளின் ஏகபுத்திரனும் திருமகள், கஸ்தூரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரமேசின் மைத்துனரும் அமரர்களான நாகர்கோயில் கோவிந்தசாமி-அன்னம்மா, அல்வாய் வித்துவான் முருகேசு-பவா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க. முருகேசு
(ஓய்வு பெற்ற அதிபர்)

அல்வாய் வடக்கு,
அல்வாய். (71789)

### கதிரவேலு டேவிட் இராஜசேகரம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட டேவிட் இராஜசேகரம் 14 - 12 - 99 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஜெகதாம்பாளின் அன்புக் கணவரும் ஜெகராஜன், Dr. நிரஞ்சனி, வத்சலா, தேவராஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருந்ததியின் அன்பு மாமனாரும் ஜெயனின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சாமுவேல் கதிரவேலு-மேரி மாணிக்கம் ஆகியோரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற மாம்பழம் குமாரசாமி- கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும் கிரேஸ் பூரணம், தங்கராஜா, அல்பிரட் அப்புத்துரை, யோண் துரைராஜா, காலஞ்சென்ற தவமணி கார்த்திகேசு, செல்வராசா, ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15-12-99) புதன்கிழமை காலை 9 மணியளவில் 30/15, கனகரத்தினம் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடியில் உள்ள இலங்கை பெந்தகொஸ்ற் சபைக்குரிய சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ஜெகதாம்பாள்,
(மனைவி)

30/15 கனகரத்தினம் வீதி,
அரியாலை. (71787)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பதிலினால் சீராகாது

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு இங்குள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையை விட, இரண்டு மடங்கு எண்ணிக்கையான வாக்குச்சீட்டுக்கள் அனுப்பப்பட்டிருப்பது, விநியோகிக்கப்பட்டிருப்பது பல வட்டாரங்களிலும் சர்ச்சையையும் சந்தேகங்களையும் உண்டாக்கி உள்ளது இது அனேகமாக குடாநாட்டு மக்கள் எல்லோருக்கும் தெரிந்த விடயமே.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் வாக்காளர்களே வசிக்கிறார்கள். அவ்வாறிருக்க, கொழும்பிலிருந்து ஆறு லட்சத்து இருபத்தைந்து ஆயிரம் வாக்குச் சீட்டுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஏன் அவ்வாறு அதிக வாக்குச் சீட்டுக்கள் அனுப்பப்பட்டன? அவ்வாறு செய்யப்பட்டதால் யாழ்ப்பாணத்தில் கள்ள வாக்குப் போடுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது - என்று பதில் தேர்தல் ஆணையாளரிடம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றனர்

இம்மாதம் பதினொராம் திகதி பதில் தேர்தல் ஆணையாளர் தமது அலுவலகத்தில் நடத்திய கலந்துரையாடலின் போதே யாழ்ப்பாணத்துக்குக் கூடுதல் வாக்காளர் அட்டைகள் அனுப்பப்பட்டது குறித்துக் கேள்வி எழுப்பப்பட்டது. இதுவரை இவ்விடயம் பத்திரிகைச் செய்திகளாக மட்டுமே வெளிவந்திருந்தது மேற்படி கலந்துரையாடலின் போது உத்தியோகபூர்வமாகிர் உள்ளது

எனினும் பதில் தேர்தல் ஆணையாளர் தமது திணைக்களச் செயற்பாட்டை ஒரு வகையில் நியாயப்படுத்தும் விதத்தில் பதில் அளித்திருக்கிறார். கள்ள வாக்குகள் போடுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்று உறுதி அளித்திருக்கிறார். வாக்களிப்பு நிலையங்களில் கடமையில் ஈடுபடும் அதிகாரிகள் சரிவரச் செயற்படுவர் என்று தெரிவித்திருக்கிறார்

வாக்காளர் ஒருவர் தமது அடையாளத்தை நிரூபிக்க, தம் வசம் உள்ள வாக்காளர் அட்டைக்கு மேலதிகமாக எந்த ஆவணத்தையும் காண்பிக்க வேண்டிய கட்டாய தேவை இல்லை. தமது பெயரையும் வாக்காளர் இலக்கத்தையும் கூறியதும் அவை இரண்டும் வாக்காளர் இடாப்பில் இருந்தால் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்.

ஏதாவது ஆட்சேபம் இருந்தால், வேட்பாளர்களின் தேர்தல் ஏஜண்டுகளே தெரிவிப்பர். அவரது கையில் பூசப்படும் மை அடையாளம் ஒன்றே அவர் மீண்டும் இன்னொருவரின் பெயரில் வந்து வாக்களிப்பதைத் தடுக்கக் கூடிய ஒரே ஒரு சாதனம். அதனை அழித்து விட முடியாது என்று உறுதியாகச் சொல்ல முடியாது.

இத்தகைய ஒரு சூழ் நிலையில் கள்ள வாக்குப்போடுவது இடம்பெறாது என்று எவ்வாறு கூறமுடியும்? தேர்தல் கண்காணிப்புக் குழுக்களாலும் கள்ள வாக்குப் போடுவதைத் தடுக்க முடியும் என்று எதிர்பார்க்கமுடியாது. எல்லா வாக்களிப்பு நிலையங்களிலும் கண்காணிக்கக்கூடிய ஆளணி அவர்களிடம் இல்லை.

ஆகையால், குடாநாட்டில் ஜனாதிபதித் தேர்தலில் கள்ள வாக்கு அளிக்கப்படமாட்டாது என்று நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. அதனைத் தடுக்க வேண்டுமாயின் மேலதிக வாக்காளர் அட்டைகளை அனுப்பியிருக்கக்கூடாது. பதில் தேர்தல் ஆணையாளரின் பதில் நிலைமையைச் சீராக்காது.

# 75 வருட சேவையை நிறைவுசெய்யும் விலைமதிப்பீட்டுத் திணைக்களம்

**இலங்கையில் விலைமதிப்பீட்டு திணைக்களம் அமைக்கப்பட்டு இன்றுடன் 75 ஆண்டுகள் நிறைவடைகின்றன. அதனை ஒட்டி இச்சிறு குறிப்பு வெளியாகின்றது.**

புதிய நூற்றாண்டு ஒன்றிலே காலடி எடுத்து வைக்கவுள்ள இவ்வேளையிலே, விலை மதிப்பீட்டுத் திணைக்களம் இந்நாட்டிலே உருவாக்கப்பட்டு தனது 75 வருட சேவையைப் பூர்த்தி செய்து பவளவிழாவினைக் கொண்டாடுகிறது.

பிரித்தானியர்களின் ஆட்சிக் காலத்திலேயே இத்திணைக்களம் உருவாக்க வேண்டிய தேவை இருந்துள்ளது, ஏனெனில் பிரித்தானியர்கள் பல்வேறு அபிவிருத்திகளைச் செய்து நாட்டை வளம்படுத்திக் கொண்டிருக்கையில், காணிகளையும் ஆதனங்களையும் சுவீகரிப்புச் செய்ய வேண்டியிருந்தது. இச்சுவீகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட பலகுரப்பட்ட சட்டங்களை (Acts) ஏற்படுத்தினர். சுவீகரிக்கப்பட்ட ஆதனங்கள் / காணிகள் என்பனவற்றுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டி இருந்தது. காலக்கிரமத்தில் ஜனநாயக ரீதியிலான நஷ்டஈட்டு கொடுப்பனவுகளை வழங்கக் கூடிய விதத்தில் உத்தியோகபூர்வமான (Professional Body of Valuers) மதிப்பீட்டாளர்களை நியமித்தனர். இவர்களால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களுள் பிரித்தானிய ராணியின் அனுமதி மூலம் 3ஆம் இலக்கச்சட்டம் Act No. 03) 1876ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. இச்சட்ட மூலம் நடைமுறைக்கு வந்தமையினால் மக்கள் நஷ்டஈடுகள் பெறுவதிலிருந்த கஷ்டங்கள் நீங்கிப்பெரிதும் பயனடைந்தனர், இச்சட்ட மூலத்தின் பிரகாரம் அரசாங்க அதிபர்களுக்கு நஷ்டஈட்டினை வழங்குவதற்கும் சட்டபூர்வமான உரித்தாளர்களை நிரூபிப்பதற்கும் பூரண அதிகாரம அளிக்கப்பட்டிருந்தது.

1876 ஆம் ஆண்டுக்கும் 1921 ஆம் ஆண்டுக்குமிடையில் இச்சட்டம நான்குமுறை இடைநிறுத்தப்பட்டதுமல்லாமல், அரசாங்க அதிபர்கள் அல்லது உதவி அரசாங்க அதிபர்கள, ஒரு மதிப்பீட்டாளரின் ஆலோசனை, உதவியைப் பெற்றே நஷ்டஈடு பற்றி முடிவெடுத்தல் வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது.

காணி சுவீகரிப்புச் சட்டம் சம்பந்தமான நிர்வாக நடவடிக்கைகளைக் கவனிக்க உள்ளூராட்சி சபையொன்று 1923 ஆம் ஆண்டு திரு. ஜே. ஜி பிறேய்சர் (J. G Fraser) அவர்கள் தலைமையில் நிறுவப்பட்டு, அரசாங்க மதிப்பீட்டாளர் (Government Assessor) என்ற பதவியும் ஏற்படுத்தப்பட்டது. கப்டன் E.G Eastman அவர்களே இலங்கையின் முதல் அரச மதிப்பீட்டாளராவார். இவரது வழிகாட்டலில் கொழும்பு கச்சேரியில் முதன் முதலாக ஒரு சிறிய அறையில் காரியாலயம் அமைக்கப்பட்டு செயற்படத் தொடங்கியது

1930 ஆம் ஆண்டு சம்பள மீளாய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் திரு. W W Woods அவர்கள் இத்திணைக்களம் குறுகிய காலத்தில் செய்துள்ள அளப்பரிய சேவைகளைப் பாராட்டினார். இவ்வாறு அரச மதிப்பீட்டாளர் நியமிக்கப்பட்டு இயங்கத்தொடங்கிய பின்னர் அரசாங்கத்தின் வருவாயில் பாரிய முன்னேற்றம் காணத் தொடங்கியது இதனால் அரச மதிப்பீட்டாளரின் கடமைகள் நன்கு உணரப்பட்டு, மிகவும் முக்கிய பொறுப்புமிக்கவராகக் கணிக்கப்பட்டார்.

திரு. எஸ். ரி. செனிவிரத்தனா என்பவர் திரு E G Eastman அவர்களிடமிருந்து பொறுப்பேற்று அதன் பின்னர் 1932 இல் திரு Alan kirk பொறுப்பேற்றார்.

1933 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதியிலிருந்து Government Assessor என்ற பெயர் Government Valuer ஆக மாற்றப்பட்டது பின்னர் திருவாளர்கள் J G Morley A. G. B Whittaker என்பவர்கள் Governmert Valuers ஆகக் கடமையாற்றினார்.

1924 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விலைமதிப்பீட்டுத் துறை பாரிய முன்னேற்றங்களைக் கண்டது. பல முக்கிய திட்டங்களை அரசாங்கம் பூரணப்படுத்த உதவ முடிந்தது. பல அரசாங்க மதிப்பீடுகளிலும் உள்ளூராட்சி மன்றுகளில் சோலை வரி மதிப்பீடுகளிலும் முன்னேற்றங்கள் காணப்பட்டன.

விலைமதிப்பீட்டுத்திணைக்களம் ஒரு தொழில் நுட்பத்திலான திணைக்களம் எனினும் தற்சமயம் அரச திணைக்களங்கள் நீதி பரிபாலனசேவை, அரச வங்கிகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் ஆகியவற்றுக்கு பல வழிகளிலும் சேவை புரிந்து வருகின்றது

இந்தத்திணைக்களத்துக்கு பொதுமக்களுடன் நேரடித் தொடர்பு இல்லையெனினும் அரச, உள்ளூராட்சி மற்றும் ஊடகங்களூடாக பொதுமக்களுக்குச் சேவையாற்றி வருகின்றது.

இத்திணைக்களம் ஆரம்பத்தில் காணி அமைச்சின் கீழ் இயங்கி வந்தது. திரு என். எம். பெரேரா அவர்கள் நிதி அமைச்சராக இருந்த போது, இத்திணைக்களம் நிதியுடன் மிகவும் சம்பந்தப்பட்டு இருப்பதையும் அரசாங்கத்துக்கு வருமானத்தைத் தேடிக் கொடுப்பதையும் உணர்ந்து தனது அமைச்சின் கீழ்க் கொண்டு வந்தார்

தி. உதயசூரியன்,
செயலாளர்,
விலைமதிப்பீட்டுத் திணைக்கள நலன்புரிச் சங்கம், யாழ்ப்பாணம்.

தற்போதைய இத் திணைக்களத்துக்கு பொறுப்பான அமைச்சராக மாண்புமிகு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அவர்களும் பிரதி அமைச்சராக மாண்புமிகு ஜி. எல். பீரிஸ் அவர்களும் உள்ளனர்.

தற்போதைய பிரதம விலைமதிப்பீட்டாளர் திரு. H.R DE SILVA அவர்கள் இத்திணைக்களத்தின் தரத்தையும் உத்தியோகத்தர்களின் நலன்களையும் உயர்த்த பல திட்டங்களைத் தீட்டி செயற்பட்டு வருகின்றார். அவருக்கு பவளவிழாக் காணும் இவ்வேளையில் மேலும் இத்திணைக்களம் உயர்வு பெற பூரண ஆதரவு நல்குவோமாக. ★

### இளைஞனைத் தாக்கிய வழக்கு

## பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் நீதிமன்றில் ஆஜர்

வலி. வடக்கு, டிசெ. 15

இராணுவத்துடன் சேர்ந்து இளைஞன் ஒருவனைத் தாக்கியதாக நபர் ஒருவர் மீது தொடரப்பட்ட வழக்கில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட அந்த நபர் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

உடுவிலைச் சேர்ந்த பால் சாலை ஊழியரான வைத்திலிங்கம் உதயராசா என்பவர் சட்டத்தரணி எஸ். சபாநாதன் மூலம் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு ஒன்றில் —

தன்னை படையினர் கைது செய்து தாக்கியதாகவும் —

படையினருடன்சேர்ந்து அரியரெத்தினம் ஹேமச்சந்திரா என்ற பொதுமகனும் தன்னைத் தாக்கிச் சித்திரவதை செய்ததாகவும் —

தெரிவித்திருந்தார்.

இந்த மனுவை ஆராய்ந்த மல்லாகம் நீதிவான் ஆர். டி. விக்கினராசா பிரஸ்தாப நபரான ஹேமச்சந்திராவுக்கு பிடியாணை பிறப்பித்திருந்தார்.

இதன்படி அந்த நபர் உடுவில்கிராமசேவையாளரினால் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

பிரஸ்தாப நபரை விசாரணை செய்த நீதிவான் 25 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல அனுமதித்தார்.

தெல்லிப்பழையில் இயங்கும் புனர்வாழ்வு நிலையப் பொறுப்பாளர் ஜெயவர்த்தனா அவரைப் பிணையில் எடுத்துச்சென்றார்.

இந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள இரு சிப்பாய்களையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு உடுவில் முகாம் இராணுவ அதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

(ஐ-3-86)

## நாளை

**மார்கழி 1**

**வியாழக்கிழமை**

திதி: அட்டமி
நண்பகல் 12.59 வரை

நட்சத்திரம்: பூரட்டாதி
முற்பகல் 8 29 வரை.

சுபநேரம்: 7.52 9 22
ராகுகாலம்: 1.52 3 22

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

முடியாதது ஒன்றை எதிர்பார்ப்பது அறியாமையாகும் துராத்மாக்கள், தங்களுடைய இயற்கைக்கு மாறாய்நடந்து கொள்பவர்கள் என்று எதிர்க்க வேண்டாம்.

மார்க்கஸ் அரேலியஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதில் தேர்தல் ஆணையாளர் நியமனம்: ஆட்சேப மனுக்கள் நிராகரிப்பு

கொழும்பு, டிசெ. 15

பதில் தேர்தல் ஆணையாளராக டி.எம்.கே. தஸநாயக்கா நியமனம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட இரு மனுக்களையும் நேற்று முன்தினம் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

உயர் நீதிமன்ற நீதிபதிகள் எச். எஸ் யாப்பா, உபாலி குணவர்த்தனா, அசோக டி சில்வா ஆகியோர் அடங்கிய குழு இந்தத் தீர்ப்பை வழங்கியது.

தேர்தல் தினம் நெருங்குவதை முன்னிட்டு இந்தத் தீர்ப்பு வழங்கப்படுவதாகவும் —

தீர்ப்புக்கான காரணங்கள் பின்னர் தெரிவிக்கப்படும் என்றும் —

நீதிபதிகள் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளனர்.

பதில் தேர்தல் ஆணையாளர் நியமனம் சட்டத்துக்கு முரணானது என்று அறிவிக்க வேண்டும் என்றும்—

இந்த நியமனத்துக்கு எதிராக இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் என்றும் — கோரி ''ராவய'' பத்திரிகை உதவி ஆசிரியர் நியூடன் செனிவிரட்ன, விமானப் படை முன்னாள் தளபதி ஹரி குணதிலக ஆகியோர் இந்த மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். (ஐ-6)

## தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டன

யாழ்ப்பாணம், டிசெ. 15

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் குடாநாட்டுக்கான 101 தபால் பொதிகள் இன்று எடுத்து வரப்படவுள்ளன.

குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 37 தபால் பொதிகள் இந்தக் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத்தபால்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(6-10)

## வாராந்த நிகழ்வு

கொழும்புத்துறை, டிசெ 15

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமனாறு அருள்மிகு ஸ்ரீசெல்வச் சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணிக்கு ''உறுபொருள் கண்டேன்'' என்ற தலைப்பில் காங்கேசன்துறை பெ துசன நூல்நிலைய நூலகர், சிவானந்த வாரிதி வ. குமாரசாமி ஐயர் உரை நிகழ்த்துவார்.

பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெறும்

இந் நிகழ்விற்கான அறிமுக உரையை க. செல்வரெத்தினம் ஜே. பி நிகழ்த்துவார்

அடியார்களுக்கு நண்பகல் 12 30 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.

(ஐ-30-173-109)

## ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்

**சண்முகம் பாலசுந்தரன்**

(பாலர்)

[கொல்லங்கலட்டி]

உதயம் 01-03-1937 — மறைவு 07-12-1997

திதி: கார்த்திகை வளர்பிறை அட்டமி (15-12-99)

மெல்ல வீராண்டு மறைந்தாலும் உமது
அன்பு முகம் எம்மைவிட்டகலாது!
நினைவகலா நெஞ்சினர் தங்கள்
ஆத்ம சாந்திக்காக நிதம் ஐங்கரன் தாள் பணிவோம்!

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

கிழுவானை லேன்,
கோப்பாய்,

(71714)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 19 6 — 12 — 10



இறைவன் அடியில் 1998 — 12 — 15

**வெலிச்சோர் மேரி மாகிறேற்**

(திரவியம்)

" என்னிடம் வருபவனையோ நான் தள்ளிவிடேன் "
( அரு. 6:37 )

எங்கள் குடும்பத்தின் மங்காத
மாணிக்கமாக இருந்து ஒளி வீசி
எங்களுக்கு வழிகாட்டிய நல்ல நாயகியே!
எங்கள் தாயே! எங்கள் அம்மாவே!
ஈராறு மாதங்கள் கடந்தனவோ!
ஓர் ஆண்டு தான் வந்த போதும்
உங்களுடைய இனிய நினைவுகள்
ஆறுமா? ஆறாதம்மா எங்கள் நெஞ்சில்
தீராதம்மா உங்களின் பாச அலைகள்!
ஒன்றாக இருந்து பேசிய அன்புமொழிகளும்
சொல்லிய புத்திமதிகளும் — இன்றும்
எம் காதுகளில் ஒலிக்கின்றன.
அம்மாவே! உங்களின் பிரிவினால்
கண்ணீர் வடிக்கும் கண்களின்
ஈர விழிகள் என்றும் காயாதம்மா!

உங்களின் ஆன்மா இறைவனுடன் சங்கமமாக இன்று நடைபெறும் இரங்கற் திருப்பலி வழியாக வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

16, பற்றிமா அவனியூ,
மிருசுவில்.

(71772)

## மணிவாசகர் விழா

யாழ்ப்பாணம், டிசெ. 15

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படுகின்ற காரை நகர் சிவன்கோயிலில் எதிர் வரும் 20 ஆம் திகதி 4மணிக்கு மணிவாசகர் விழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவில் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் செ. தேவதாசன் எழுதிய 'தில்லைக் கூத்தன் திரு நடனம்' எனும் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. நூலுக்கான ஆய்வுரையை முன்னாள் அதிபர் க. தில்லையம்பலம் நிகழ்த்துவார்.

இந்த ஆலயத்தில் தொடர்ந்து 45 ஆண்டுகள் நடைபெற்று வரும் மேற்படி விழாவானது இம்முறையும் 3 தினங்கள் நடைபெறும். மூன்று தினங்களும் சொற்பொழிவுகள், பண்ணிசை பரிசில் வழங்கல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(ஐ-10)

## பாகவதபடனம்

யாழ்ப்பாணம், டிசெ.15

திருநெல்வேலியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் நாளை வியாழன் காலை 8.30 மணி முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை வரை பாகவதப் படனம் நடைபெறவுள்ளது. 22 ஆம் திகதி போயா தினத்தன்று நண்பகல் நாராயண சேவையுடன் நிகழ்ச்சி நிறைவு பெறும்.

(ஐ-30)

## செயலமர்வு

காரைநகர், டிசெ. 15

தீவக கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 7 இல் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் சனி. ஞாயிறு தினங்களில் யாழ். மத்திய கல்லூரியில் காலை 8.30 மணிமுதல் நடைபெறும் என்று தீவக கல்விவலயப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ஐ-73)

## 75 ஆவது ஆண்டு நிறைவு விழா

விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவுவிழா இன்று புதன் கிழமை யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தில் நடைபெறும்,

வடமாகாண விலை மதிப்பீட்டாளர் க. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(க-86)

## பாலர் பாடசாலைகளுக்கு இலவச நூல்

நெடுந்தீவு, டிசெ. 15

நெடுந்தீவில் உள்ள பாலர் பாடசாலைகளுக்கு இலவச பாட நூல்கள் வழங்கப்படவுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் அ. வெ. அரியநாயகம் தெரிவித்தார்.

இதற்கென கொழும்பில் இருந்து ஒரு தொகுதி நூல்கள் நெடுந்தீவுக்கு வந்துசேர்ந்துள்ளதாகவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அவை பாலர் பாடசாலைகளுக்குக் கையளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

[ஐ-111]

## கல்விப்பணிமனை இடம்மாறும்

தீவக வலயக் கல்விப் பணிமனை விரைவில் வேலணை கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்திற்கு மாற்றப்பட உள்ளது.

மேற்படி சங்கத்திற்குச் சொந்தமான இரு கட்டடங்கள் இதன் பொருட்டுத் தற்சமயம் திருத்தியமைக்கப்படுகின்றன.

இக்கட்டடப் புனரமைப்புப் பணிகளுக்கென வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு நிதி உதவியினை வழங்கியுள்ளது. (ஐ-111)

## நல்லூர் வணிகர்கழக அறிவித்தல்

நல்லூர வணிகர் கழகத்திற்குட்பட்ட கடைகள் அனைத்தும் 15-12-99 தொடக்கம் 31-12-99 வரை ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வே. திருநாவுக்கரசு
— செயலாளர்

(71773)

## அன்பான வேண்டுகோள்

1999 ஆம் ஆண்டு எம்மிடம் பழுது பார்க்கத் தரப்பட்ட
றேடியோ மற்றும் மின்சார உபகரணங்களை
இம்மாத இறுதிக்குள் தயவுசெய்து பெற்றுக்கொள்ளவும்
தவறின் உங்கள் பொருள்களுக்கு நாங்கள்
பொறுப்பாளிகள் அல்லர்.

நன்றி

**முரளி எலக்ரோனிக்ஸ்**

98 பஜார் வீதி. யாழ்ப்பாணம்.

(71778)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1955 — 01 — 20



உதிர்வு 1998 — 12 — 15

**திருமதி சகுந்தலா செல்வராசா**

இளையவளே!
உன்சிரித்த முகம், அன்பான அரவணைப்பு
தந்தையாகவும் தாயாகவும் சுடர் விட்டாய்; இன்று
ஓராண்டு ஆனாலும் எம்நெஞ்சம் துடிக்குதம்மா!
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உன் அம்மா, பிள்ளைகள்,
அக்காமார், அத்தான்மார்,
பெறாமக்கள்.

M. S ஒழுங்கை,
கோண்டாவில்.

[71770]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 03 — 07 — 1928



மறைவு 31 — 10 — 1999

அமரர்

**சின்னத்தம்பி சுப்பையா**

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய்திகழ்ந்தவரும் வாழ்க்கைக்கு வழிகாட்டியாய்த் திகழ்ந்தவருமான எமது பாசமிகு தந்தையின் மரணச் செய்தி அறிந்து எமது இல்லத்துக்கு வருகை தந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியோர்களுக்கும் மற்றும் மலர் வளையம் போன்றவற்றால் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

கைதடி மேற்கு,
கைதடி.

(சி/10203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு வயல்களில் எலிகளால் பெரும் சேதம்

## கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு ஆலோசனை

யாழ்ப்பாணம், டிசெ. 15

நெல் வயல்களில் எலியின் தாக்கம் அதிகரித்து வருவதால் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு உதவி விவசாயப் பணிப்பாளர் ச. சின்னத்துரை நெற் செய்கையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

எலியின் தாக்கம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நெற்பயிர்களை எலிகள் வெட்டிச் சேதப்படுத்துவதை வயல்களில் பரவலாக காணக் கூடியதாகவிருக்கின்றது கதிர் வரவிருக்கும் பயிர்களில் தாக்கம் ஏற்படுவதுடன் கதிர் வந்ததன் பின்னரும் இதன் தாக்கம் தொடர்வதால் விரைவில் பாரிய இழப்புகள் ஏற்பட இடமுண்டு.

எலியினால் வெட்டிச்சேதப் படுத்தப்படும் வயல்களில் வயல் வரம்புகளையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருப்பதால் இவற்றின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

இரசாயன மருந்துகள் மூலம் இதனைக் கட்டுப்படுத்துவதாயின் முதலில் மருந்து கலப்பற்ற உணவை ஓரிரு நாள்கள் வைத்து அவற்றைக் கவரச் செய்து அதன் பின் குமறின் (KUMARIN) அல்லது றன்றாட் நச்சு மருந்தை வறுத்த சோளம், வறுத்த அரிசிக் குறுணலுடன் ஒரு பங்குமருந்துக்கு 19 பங்கு உணவு என்ற விகிதத்தில் கலந்து நீரில் நனையாதவாறு வயல் வரம்புகளிலும், வயல்களிலும் ஏக்கருக்கு 15 இடங்களில் வைக்க வேண்டும்.

இம்மருந்துக் கலவையை 4 அல்லது 5 நாள்களுக்கு ஒரு முறை மாற்றி வைக்கவேண்டும். இப்படியாக சில நாள்களுக்கு வைப்பதன் மூலம் இவற்றைக் கட்டுப்படுத்தலாம்.

இப்படி அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

(ஐ-5-10-17-86)

# சோடாப் போத்தலில் கசிப்பு எடுத்து வந்தவர் கைது

வலி. வடக்கு, டிசெ, 15

13 லீற்றர் கசிப்பை விற்பனை செய்வதற்காகக் கொண்டுவந்த ஒருவர் மல்லாகம் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டார்.

ஒன்றரை லீற்றர் சோடாப் போத்தல்கள் எட்டில் சோடா போன்ற பாவனையில் கசிப்பை எடுத்து வந்துள்ளார். அதனால் சந்தேகம் கொண்ட மல்லாகம் இராணுவ முகாம் பொறுப்பாளர் அவரைக் கைது செய்தார்.

கைது செய்யப்பட்டவர் வயாவிளானில் இருந்து இடம் பெயர்ந்து சுன்னாகம் பகுதியில் வசிப்பவர் ஆவார்.

இவர் சுன்னாகம் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(ஐ-86)

# தராசுப்படிகளுக்கு முத்திரையிடல்

கொழும்புத்துறை, டிசெ. 15

பண்டத்தரிப்பு பிரதேச சபைக்காரியாலயத்தில் நாளை வியாழக்கிழமையும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் காலை 9-30 மணி தொடக்கம் பிற்பகல் 1-30 மணி வரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி நடைபெறும்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இப்பகுதியில் உள்ள சந்தைகள், வியாபார நிலையங்கள், மில், பேக்கரி ஆகியனவற்றின் உரிமையாளர்கள் தத்தமது நிறுவை — அளவை உபகரணங்களுக்கு தவறாது முத்திரையிடுக் கொள்ளுமாறு யாழ். செயலக நிறுவைகள், அளவைகள் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி கா. நாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

அலுவலக ஊழியர்களின் திடீர்பரிசோதனையின்போது முத்திரையிடப்படாது பாவிக்கப்படும் நிறுவை - அளவைகள் கண்டுபிடிக்கப்பட்டால் தகுந்த சட்ட நடவடிக்கை உடன் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-30)

# 283 சமுர்த்தி உத்தியோகத்தருக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள்

வலி.தென்மேற்கு.டிசெ 15

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இருநூற்றி 83 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு யாழ். செயலகத்தில் வைத்து நிரந்தர நியமனக் கடிதங்களை யாழ், அரசாங்க அதிபர் ச. சண்முகநாதன் வழங்கினார்.

கடந்த ஆண்டு முதல் நியமனம் பெற்ற சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களே 1—11—99 முதல் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக சமுர்த்தி அதிகார சபையினால் நியமிக்கப்பட்டனர்.

நியமனம் பெற்றவர்கள் ஏற்கனவே கடமை புரிந்த நிலையங்களிலேயே நியமனம் பெற்றுள்ளனர்.

இந்நிகழ்வில் ஈ. பி. டி. பி கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் கலந்துகொண்டு உரையாற்றினார்.

(ஐ185)

# கூட்டுடன் கோழி திருடியவர் படையினரிடம் சிக்கினார்

வலி.வடக்கு, டிசெ. 15

கோழிக் கூட்டுடன் கோழிகளைக் களவாடினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மல்லாகம் குளமங்காலைச் சேர்ந்த அருளானந்தம் றெசிலி என்பவர் மல்லாகம் இராணுவப் பொறுப்பாளர் லெப்டினன்ட் ஹெட்டவேவாவினால் கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவருடன் களவில் ஈடுபட்டதாகக் கருதப்படும் இருவர் தலைமறைவாகி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அளவெட்டி கணேஸ்வரம் அம்பட்டாவத்தையைச் சேர்ந்த ஒருவரது வீட்டிலேயே கோழிகள் களவாடப்பட்டிருந்தன.

(ஐ-86)

# அரசுக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் யுத்தம் நீடிக்க துணைபோகக் கூடாது

## மலையக மக்கள் முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 15

தமிழ் மக்களின் ஆதரவு தனக்கு முழுமையாக இல்லை என்ற நிலையில் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக விடுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்தும் இன்றைய யதார்த்த நிலையை தமிழ்க் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த அரசு தொடர்ந்து நீடிப்பதை ஆதரிப்பதோ, நடுநிலை வகிப்பதோ தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு எதிரான நிலைப்பாடேயாகும். மீண்டும் தொடரப் போகும் அபாயகரமான யுத்தத்துக்கு யாரும் துணை போகக் கூடாது.

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரன் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது—

இலங்கையில் உடனடி ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டுமென்ற உணர்வு சகல சிறுபான்மை மக்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது ஐந்து வருட காலமாக நடந்துவரும் அகோர யுத்தத்தை நியாயப்படுத்த முடியாத நிலையில் அரசு உள்ளது.

காலத்தின் தேவையை உணர்ந்தும் மக்களின் எதிர்பார்ப்புக்கேற்ப எமது அரசியல் நிலைப்பாடு இருக்க வேண்டும் என்பதற்காகவும் இலங்கையில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டுமென்பதற்காகவும் ரணில் விக்கிரமசிங்க அவர்களை மலையகமக்கள் முன்னணி ஆதரிக்க முடிவு செய்தது.

இந்த முடிவு விடுதலைப் புலிகளின் நெருக்குதலால் எடுக்கப்பட்ட முடிவு என்று அரசு தரப்பில் சிங்கள மக்களிடம் தெரிவிக்கப்படுகிறது. இதே போல ஐக்கிய தேசியக் கட்சியை மக்களிடம் விமர்சிப்பதற்காக புலிகளையே இந்த அரசு பயன்படுத்துகிறது.

இது சிங்கள மக்களிடம் வாக்குகளைப் பெறுவதற்கான மறைமுக இனவாத யுக்தியேயாகும்.

இந்த நாட்டின் அமைதியிலும் தமிழ் மக்களின் எதிர்காலத்திலும் உள்ள அக்கறையை வெளிக்காட்டுவதற்கு சகல தமிழ் அமைப்புகளும் ஒன்று சேர வேண்டுமென மலையக மக்கள் முன்னணி அறைகூவல் விடுக்கின்றது எமது நாட்டின் யுத்த வரலாற்றில் திருப்பத்தை ஏற்படுத்தக்கூடிய இந்தக்கால கட்டத்தில் அனைத்து சிறுபான்மைக் கட்சிகளும் ஒரே நோக்கில் நின்று தங்களது வரலாற்றுக் கடமையைச் செய்ய வேண்டுமென மலையக மக்கள் முன்னணி கேட்டுக் கொள்கின்றது என்றுள்ளது.

(ஐ-3)

# செய்திக் கொத்து

### உருளைக் கிழங்கு செய்கை

புன்னாலைக்கட்டுவன் டிசெ. 15

புன்னாலைக்கட்டுவன், ஈவினைப் பிரதேச விவசாயிகள் உருளைக்கிழங்கு செய்கையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட உருளைக்கிழங்கு விதைகளை ஏற்கனவே பதப்படுத்தி ஆயத்தமாக வைத்த நிலப்பிரதேசத்தில் பயிரிட்டுள்ளனர்.

(க-133)

### புதிய வசந்த மண்டபம்

கொழும்புத்துறை டிசெ 15

யாழ். சந்திரத்து ஞான வைரவர் கோயிலுக்குத் தற்போது புதிதாக வசந்த மண்டபம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த மண்டப வேலைகள் சுமார் 15 லட்சம் ரூபா செலவில் நடைபெற்று வருவதாக ஆலயபரிபாலன சபையின் தலைவர் கங்கை வேணியன் நித்தியானந்தம் தெரிவித்தார்.

அத்துடன் ஆலயக் கிழக்கு வாசலில் எட்டுத் தூண் அமைந்து வில்லு மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டு வருகிறது.

(ஐ-30)

### சின்னம் சூட்டும் வைபவம்

யாழ்ப்பாணம், டிசெ. 15

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இன்ரறக்ட் கழக அங்கத்தவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியின் இறுதிச் சுற்றும் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன. அத்துடன் 'மலையருவி' எனும் சஞ்சிகையும் வெளியிடப்பட்டது

[க-8]

### ஒளிவிழா

நெடுந்தீவு, டிசெ. 15

நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபையின் சிறுவர் பகல் பராமரிப்பு நிலையத்தின் ஒளிவிழா வண. ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக அருட் செல்வி சிப்பிரியான் கலந்து கொண்டார்.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன், பல. நோ. கூ. சங்கத் தலைவர் நா. சங்கரப்பிள்ளை கோட்டக் கல்வி உதவிப் பணிப்பாளர் க. அரசரத்தினம் இரா. தர்மலிங்கம் ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

(2-111)

### அங்குரார்ப்பணம்

தென்மராட்சி, டிசெ.15

பளைப் பிரதேச பாலர் பாடசாலைகளின் ஆசிரியைகளின் சங்கம், கடந்த மாதம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பளைப் பிரதேச சனசமூக நிலைய அபிவிருத்தி அலுவலர் ம. ஞானவேல்ராஜா தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக பளைப் பிரதேச சபைச் செயலாளர் கு ந. பாலச்சந்திரன் கலந்து கொண்டார்.

(க-117)

### பனடோல் தட்டுப்பாடு

திருநெல்வேலி, டிசெ. 15

கொக்குவில், கோண்டாவில் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் வைத்திய சாலைகளில் பனடோல் குளிசைக்கு தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

[ஐ-135-69]

### நுளம்புப் பெருக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 15

தொடர்ந்துபெய்துவரும் மழை காரணமாக வடமராட்சிப் பகுதியில் குறிப்பாக பருத்தித்துறைப் பகுதியில் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது.

மழை வெள்ளம் வடிந்து செல்லாது ஆங்காங்கே வெள்ள வாய்க்கால்களிலும், குடியிருப்பு மற்றும் பள்ளக்காணிகளிலும் நிரந்தரமாக நீண்ட நாள்களாக தேங்கி நிற்பதை அடுத்தே நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது.

(க-15)

### ஆசிரியர் கைந்நூல்கள்

புன்னாலைக்கட்டுவன், டிசெ. 15

சித்திரப் பாடத்துக்கு ஆசிரியர்கைந்நூல்கள் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டு தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

புதிய கல்விச் சீர்திருத்த நடைமுறைக்கமைய வே தரம் 9, 10, 11 ஆகிய வகுப்புகளுக்கு இந்த ஆசிரியர் கைந்நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

(க-133)

### கடனுதவிக்கு கோரிக்கை

திருநெல்வேலி, டிசெ. 15

கந்தர்மடம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் சங்க அங்கத்தவர்களுக்குகோழிவளர்ப்பு, கால்நடை வளர்ப்பு போன்ற சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்காக சுயமுயற்சிக் கடன் பெறுவதற்கு உதவுமாறு நல்லூர் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கந்தர்மடம் வடக்கு (ஜே — 102) கிராம அலுவலர் வ சந்திரசேகரம் ஊடாக இதற்கான விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக மேற்படி சங்க தலைவர் க சிவராமலிங்கம் தெரிவித்தார்.

[ஐ-135]

### கற்கை நெறிக்கு 103 மாணவர்கள் தெரிவு

வலி.தென்மேற்கு, டிசெ.15

யாழ். பல்கலைக்கழகத்தில் 99 — 2001 கல்வி ஆண்டில் பகுதிநேர பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு 103 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

உயர் பட்ட கல்வி பீடம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இம் முறை அதிகளவிலான ஆசிரியர்கள் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-185)

### வீதி திருத்தம்

புன்னாலைக்கட்டுவன், டிசெ. 15

புன்னாலைக்கட்டுவன் மயிலங்காடு வீதி திருத்தும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

கடந்த பத்து ஆண்டு காலமாக இந்த வீதி திருத்தப்படாமல் மோசமான நிலையில் குண்டும் குழியுமாக இருந்து வந்தது.

(க-133)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

185/6 இல்லர்லேன், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சிந்துஜா ஜெயக்குமார் ஆகிய எனது விசேட அடையாள அட்டை [0901006127] சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கும் இல்னர் லேனுக்கும் இடையில் 13-12-99 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும்.

[71768]

## விற்பனைக்கு

மண்ணிறம கலந்த வெள்ளை பொமேரியன் நாய்க்குட்டிகள் (40 நாள் நிரம்பியவை) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 150, நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். T.P. NO 2894. (71771)

## கரோல் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க கிறிஸ்தவ மாணவர்கள் ஒன்றிணைந்து வழங்கும் 'யூபிலியை நோக்கி' கரோல் நிகழ்ச்சி இன்று புதன்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (க)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும் 1999 2000 ஆம் ஆண்டுக்கான தொலைக் கல்வி பயிற்சிநெறியைப் பின்பற்றும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி நிலையத்தில் நடைபெற உள்ளது.

இந்தசெயலமர்வில்தொலைக் கல்விப் பயிற்சி பெறும் ஆசிரியர்களையும் புதிதாக விண்ணப்பித்து பயிற்சி பெற இருக்கும் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (6)

3 ?

(சி/10183)

# 2ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



## அமரர் வேலாயுதபிள்ளை நல்லம்மா

**15-12-1999**

அன்பின் சுடரே அருளின் உருவே
இன்னரும் சோதியாய் எமக்கொளி தந்த
தன்னிகரில்லாத் தவத்தின் வடிவே!
அன்பின் தாயே! ஆண்டுகள் பல சென்றாலும்
நின் அன்பு வடிவம் அகத்தில் நிற்கும்!

மகள் - சுந்தரி

டச்சு றோட்,
சங்குவேலி வடக்கு.
மானிப்பாய்.

(71777)

# 2000 PHOTO CONTEST

## திரு வீடியோ விஷன் கலர் லாப்

ஆதரவில் நடத்தப்படும்

## கலர் படப்பிடிப்புப் போட்டி

அனேகரின் வேண்டுகோளின்படி இன்று 15-12-99 முடிவுற வேண்டிய கலர்படப் பிடிப்புப் போட்டி 31-12-99 வரை நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சில நிபந்தனைகளும் தளர்த்தப்பட்டுள்ளன.

★ எந்தக் கலர் படச்சுருளில் என்றாலும் புகைப்படம் எடுக்கலாம்.
★ எந்த அளவிலாயினும் பிரதியாக்கம் செய்யலாம்.
★ என்ன Paper இல் ஆயினும் பிரதியாக்கம் செய்யலாம்.
★ Negetive ஐ உடன் அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு: தபால் மூலம் பல Photo க்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. சகலருக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பப்படும்.

நன்றி.

**திரு வீடியோ விஷன்**
கரணவாய் தெற்கு, கரவெட்டி.
T. P. 070 - 212231

(71783)

# கண்ணீர் அஞ்சலி

யா / உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய அதிபர்
திருமதி அமிர்தயோகம் முத்துக்குமாரசாமி
அவர்களின் அன்புத்தந்தையார்

## வேலாயுதர் சண்முகம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்.

(71775)

# யூரோமைண்ட்

அக்ரிவ் மல்ரீ டிரைக்ஷனல்
அன்டனாவில் பூஸ்டர் பொருத்தப்பட்டுள்ளது



* அனைத்து அலைவரிசைகளிற்கும் ஒரே அன்டனா
* ஜேர்மன் தொழில்நுட்பம்

**LANKA NIPPON**
No. 18, Keyzer Street, Colombo 11. Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place, (Behind Milk Bar), Bambalapitiya Junction, Colombo 4. Tel: 589992

(சி/9856)

# நன்றி கூறுகின்றேன்

கொக்குவில் கிழக்கு பொற்பதி விநாயகர் ஆலயத்தில் 13-12-1999 அன்று நடைபெற்றகஜமுக சூர சங்காரத்தை மிகவும் சிறப்பாக நடத்தி வைத்த ஆனைக்கோட்டை சாவல்கட்டு ஞானவைரவர் ஆலய இந்து இளைஞர்களுக்கு ஆலயத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

தி. நடராஜ சர்மா

கொக்குவில் கிழக்கு பொற்பதி
விநாயகர் ஆலயம்.

[71786]

# சுனில் ஆட்ஸ்
# SUNIL ARTS

05-12-99 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கலர் படச்சுருள்களுக்கான படங்கள் வந்துவிட்டன.

"உடன் பெற்றுக் கொள்ளவும்."

18-12-99 அன்று படச்சுருள் கொழும்புக்கு அனுப்பப்படும்.

**SUNIL ARTS**
272, Stanley Road, Jaffna.

(10206)


# புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு



அன்புடையீர்!
நிகழும் பிரமாதி வருடம் கார்த்திகை மாதம்
29 ஆம் நாள் (15-12-99) புதன்கிழமை
காலை 9.15 — 10.10 மணி வரையுள்ள
சுப முகூர்த்தத்தில் எம்மால் புதிதாக

## சிறி கருமாரி நகையகம்
## SRI KARUMARI NAKAIAHAM

எனும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்க இருப்பதால் நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் சமுகம்தந்து ஆக்கமும் ஊக்கமும் தந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



தங்கள் இனிய நல்வரவை நாடும்
ச. கனகசபாபதி (சபா)
(உரிமையாளர்)

177 D, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(71753)

குறிப்பு: இல. 175/2, என்ற முகவரியில் இயங்கிய ஸ்தாபனம் 15-12-99 இன்று தொடக்கம் மேல் குறித்த விலாசத்தில் இயங்கும் என்பதை நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

# விலைமதிப்பீட்டுத் திணைக்கள பவளவிழா

இடம்: விலைமதிப்பீட்டுத் திணைக்களம், இல. 148, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

காலம்: 15-12-1999 இன்று புதன்கிழமை முற்பகல் 9.30 மணி

தலைமை: திரு. பா. பாலேந்திரன் (மாவட்ட விலைமதிப்பீட்டாளர்)

பிரதம விருந்தினர்: உயர்திரு க. சண்முகநாதன் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.)

75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு நிகழ்வும் இன்று இடம்பெறும்.

மாவட்ட மதிப்பீட்டாளரும் உத்தியோகத்தர்களும்.

விளம்பர அன்பளிப்பு;
**'மெடி எயிட்ஸ்'**
**MEDI AIDS**
நல்லூர். இருபாலைச் சந்தி,

(71785)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகாவை ஆதரிக்க புளொட் கட்சி முடிவு!

கொழும்பு, டிசெ. 15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் சந்திரிகா குமாரதுங்கவை ஆதரிக்கப் போவதாக புளொட் அமைப்பு அறிவித்துள்ளது.

அந்த அமைப்பு நேற்று விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

த சித்தார்த்தன்கையொப்பமிட்டு விடுத்துள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அவர்களையே நாம் ஆதரிக்கிறோம்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்கக்கூடிய சாத்தியக்கூறுகள் அமையக்கூடிய இரு பிரதான கட்சிகளினதும் தேர்தல் விஞ்ஞாபனங்களும் வெளியிடப்பட்டுள்ள நிலையில், எமது தேசிய இனப்பிரச்சினையின் தீர்வு குறித்து இரு கட்சி வேட்பாளர்களும் தெரிவித்துள்ள கருத்துக்களின் அடிப்படையிலும் நடைமுறையில் சாத்தியப்படக்கூடியது என்று நாம் நம்புவதாலும் இந்த ஆதரவைத் தெரிவிக்கின்றோம்.

இதுவரை காலமும் ஆட்சித் தலைமையில் அமர்ந்திருந்த சிங்களத் தலைவர்களில் சந்திரிகா ஒருவரே குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதான அடிப்படை விடயங்களை உள்ளடக்கிய தீர்வுத்திட்ட யோசனையை முன்மொழிந்தவராகக் காணப்படுகிறார். தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்கக்கூடிய ஒரு முழுமையான தீர்வுத் திட்டமாக அமையாவிடினும்கூட தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கக்கூடிய அம்சங்கள் அடங்கியிருப்பதைக் காண்கிறோம்.

குறிப்பாக, ஒற்றையாட்சி முறையினை நீக்கியதன் மூலம் இனப்பிரச்சினை குறித்த பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் காணப்பட்டு வந்த பிரதான தடைகளில் ஒன்று நீங்கியுள்ளது-

நாடாளுமன்றத்தில் கடந்த 5 வருடகாலத்தில் தீர்வு யோசனைகள் சட்டமாக்கப்படாததற்கான முழுப் பொறுப்பையும் சந்திரிகா மீது மாத்திரம் சுமத்த நாம் விரும்பவில்லை. நாடாளுமன்றத்தெரிவுக்குழுக் கூட்டத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐ தே. கட்சிமற்றும்ஜே. வி. பி. உள்ளிட்ட பல சக்திகள் எவ்வாறு பாதகமான முறையில் நடந்துகொண்டன என்பது தமிழ் மக்கள் அனைவரும் அறிந்துகொண்ட விடயம்.

கடந்த ஆட்சிக் காலத்தில் அரசமைப்பு மாற்றத்தை நடைமுறைப்படுத்த முடியாமல்போனதை ஏற்றுக்கொண்டுள்ள சந்திரிகா மீண்டும் தெரிவு செய்யப்படுமிடத்தில் எவ்வழியிலும் அம்மாற்றத்தைக் கொண்டு வருவேன்என உறுதியளிக்கிறார்.

ஒருவர் இரண்டு தடவைகள் மட்டுமே ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியும்என்பதால் சந்திரிகாவின் இரண்டாவது ஆட்சிக்காலத்தில் எதிர்க்கட்சி மற்றும் பேரினவாத சக்திகளின் நிர்ப்பந்தங்களுக்கு வளைந்து கொடுக்க வேண்டிய அவசியம் இருக்காது என்பதையும், இனப்பிரச்சினைத் தீர்வை உள்ளடக்கிய அரசியலமைப்பு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு இன்னும் அதிகமான வாய்ப்புகளும் அவசியமான சூழலும் இருக்கும் என்பதையும் நம்புகிறோம்

சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் நிராகரிக்க முடியாதிருக்கும் புலிகளுடன் பேசுவது என்ற விடயத்திலும் கூட வெளிப்படையாக பல்வேறுபட்ட கருத்துக்களைக் கூறியிருந்தாலும் சந்திரிகா யதார்த்த வாதியாக செயற்பட்டிருந்ததை நம்மால் உணர முடிகிறது.

நோர்வே அரசுப் பிரதிநிதிகள் ஊடாகவும் செயலாளர் மூலமாகவும் பேச்சுக்களை ஆரம்பிக்க சந்திரிகா மூன்று முறை முயற்சித்ததை லண்டனில் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் புலிகள் தலைவர் பிரபாகரனும் பகிரங்கமாக கூறியுள்ளனர்.

யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினருக்கிடையே பேச்சுவார்த்தை நடவடிக்கைகள் இவ்வாறுதான் ஆரம்பிக்கப்பட முடியும் என்பதை பல நாடுகளில் நடைமுறைப் படுத்தப்பட்ட தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுகள் எமக்கு அனுபவ பாடமாகும்.

இந்த நிலையில்.

அரசியல் தீர்வு குறித்த பேச்சுக்களை விட்ட இடத்தில் இருந்து தொடர்வது

புலிகளுடன் பேசுவதில் நடைமுறைக்குச் சாத்தியமான வழியைத்தொடர்ந்து மேற்கொள்வது —

எந்தக் காலகட்டத்திலும் எத்தகைய சூழலிலும் குறைந்தபட்சம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்களின் நலன்களுக்காவது அச்சுறுத்தல்கள் ஏற்படாமல் பாதுகாப்பது —

ஆகிய பிரதான விடயங்களை விரிவாக ஆராய்ந்து தமிழ் மக்களின் நீண்ட கால நலன் கருதி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவையே ஆதரிக்கிறோம் — என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# வாக்காளர் அட்டைகளை தபாலகங்களில் பெற ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ 15

இதுவரை வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவாக்காளர்கள் யாழ். பிரதம தபாலகத்துக்கு நேரில் வந்து தமது வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை எல்லைக்குள் தம்மை வாக்காளராகப் பதிவுசெய்து கொண்டவர்களில் இதுவரை வாக்குச் சீட்டுக்கள் கிடைக்கப் பெறாதவர்களே யாழ். தபாலகத்தில் வாக்குச் சீட்டுக்களைப் பெறமுடியும்.

நேற்றுடன் தபால் மூலமான வாக்காளர் அட்டை விநியோகம் முடிவடைந்துள்ளதாகவும் —

எதிர்வரும் டிசெம்பர் 21 ஆம் திகதி பிற்பகல் 4 மணி வரை வாக்காளர்கள் தமது வாக்குச் சீட்டுக்களை தபாலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும் என்றும் —

தெரிவிக்கப்பட்டது

இதேபோன்று ஏனைய பகுதிகளைச் சேர்ந்த வாக்காளர்களும் தத்தம் பகுதி தபாலகங்களுக்குச் சென்று வாக்குச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

சாவகச்சேரி, நுணாவிலில் ஏற்பட்ட பதற்றச் சூழ்நிலை காரணமாக அந்தப் பகுதிகளில் வாக்காளர் அட்டை விநியோகிக்கும் பணி ஸ்தம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

அரியாலை கிழக்கு, மணியம் தோட்டம் ஆகிய இடங்களைச் சேர்ந்த வாக்காளர்கள் தமது வாக்காளர் அட்டைகளை யாழ். பிரதம தபாலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு தபால் திணைக்கள வட்டாரங்கள் கேட்டுள்ளன.

மேற்படி பகுதிகளுக்கு வாக்காளர் அட்டைகளை விநியோகிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் இப் பகுதியைச் சேர்ந்த வாக்காளர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பாக அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-9-10)

# தென்னம் நாற்று விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ. 15

புத்தூர் கமநலச் சேவை நிலையத்தினால் தென்னம் நாற்றுக்கள் விநியோகிக்கும் பணி இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது

முற்பணம் செலுத்தியவர்கள் நல்லூர் கமநலச் சேவை நிலையத்துடன் தொடர்பு கொண்டு தத்தமது பகுதிகளில் விநியோகிக்கும் திகதிகளைத் தீர்மானித்துக் கொள்ளுமாறு கமநலச் சேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்

மேற்படி விநியோகத்துக்கென 20 ஆயிரம் தென்னம் நாற்றுக்கள உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-10)

# யாழ்.நீதிமன்றில் ஆஜர்செய்யக்கோரி எட்டுக் கைதிகளின் உறவினர் மனு

யாழ்ப்பாணம், டிசெ. 15

காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எட்டுக் கைதிகளை யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு கோரி அவர்களது உறவினர்கள் சார்பில் யாழ். நீதிமன்றத்தில் தனித்தனியே நேற்று மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

சட்டத்தரணி க. கேசவனின் அனுசரணையுடன் சட்டத்தரணிகளான செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், திருமதி ச இளங்கோவன் ஆகியோர் யாழ். நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் இந்த மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

பிரஸ்தாப எட்டுச் சந்தேக நபர்களையும் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி காங்கேசன்துறை தடுப்பு முகாம் பொறுப்பதிகாரிக்குக் கட்டளையிடும்படியும்—

இந்த மனு மீதான விசாரணை முடியும் வரை குறிப்பிட்ட சந்தேக நபர்களை வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்யவேண்டாம் என்று உத்தரவிடவேண்டும் என்றும்—

மனுக்களில் கோரப்பட்டிருந்தது

மனுக்களை ஏற்றுக் கொண்ட நீதிவான் மேல் விசாரணையை அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

செல்வி சண்முகம் சர்மிலா (மட்டுவில் தெற்கு). செல்வி பத்மினி கணபதிப்பிள்ளை நீர்வேலி மத்தி), நடராசா தயாளன் (யாழ்ப்பாணம்), திருமதி தெய்வேந்திரம் ரஞ்சிதவதனி (வண்ணார் பண்ணை), பரமானந்தன் ஸ்ரீராகவன் (திருநெல்வேலி), கிருஷ்ணன் விஜயகுமார் (யாழ்ப்பாணம்), மார்கண்டு கிரிசாந்தன் (யாழ்ப்பாணம்) ஆகியோர் சார்பாகவே இந்த மனுக்கள் தாக்கல் செய்யப் படடுள்ளன (ஐ-3-5-9)

# நாடு முழுவதிலும் டாக்டர்கள் திங்கள் முதல் வேலை நிறுத்தம்

## ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைகள் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 15

நாடெங்கும் உள்ள அரசாங்க மருத்துவமனைகளில் பணியாற்றும் டாக்டர்கள் திங்கட்கிழமை நண்பகல் முதல் கால வரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

டாக்டர்களின் பதவி உயர்வுக்கான பரீட்சைகளை மாகாண சபைகளின் சுகாதார அமைச்சின் கீழ்கொண்டு வருவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது எனறும்—

டாக்டர்களுக்கான சேவை மத்திய அரசின் கீழ் கொண்டு வரப்படுவதற்கான சாதகமான பதில் அரசிடம் இருந்து கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்றும்—

அரசாங்க மருத்துவர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

டாக்டர்களின் இந்த வேலை நிறுத்தத்தால் நாடெங்கும் உள்ள மருத்துவமனைகளின் வெளி நோயாளர் பிரிவுகளில் சிகிச்சை பெரிதும் பாதிப்படைந்தது

வேலை நிறுத்தம் தொடருமானால் அவசர மருத்துவ சேவைகளும் பாதிப்படையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மருத்துவர் சங்கம் நடத்திய இத்தகைய வேலை நிறுத்தப் போராட்டத்தால் பலர் சிகிச்சை பெறமுடியாமல் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (உ-6)

# குருநகர் மீனவர்கள் நிவாரணம்கோருகின்றனர்

யாழ்ப்பாணம்,டிசெ 15

கடற்றொழில் செய்வதற்கு இராணுவத்தினர் தடைவிதித்துள்ளமையால் பட்டினி நிலையை எதிர்நோக்கியுள்ள குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் நிவாரணம் வழங்குமாறு கோரி நேற்று யாழ் அரசாங்க அதிபருக்கும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் மகஜர் கையளித்தனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலையின் காரணமாக கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்வது இராணுவத்தால் தடை செய்யப்பட்டுள்ளது.

இதனால் அன்றாட ஜீவனோபாயத்தை நம்பி இருக்கும் நாம் தொழில் வருமானமும் இன்றி இராணுவத்தின் அனுமதியும் இன்றி வேறு இடங்களுக்குச் சென்று தொழில் செய்ய முடியாத நிலையில் சொல்லொணா கஷ்டத்தை அனுபவிக்கின்றோம்

எனவே எமது மக்களின் துயர் நிலையைப் போக்க விரைவில் நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் — என்று மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

கடற்றொழிலாளர்கள் சார்பில் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தினால் மகஜர் கையளிக்கப் பட்டன. (ஐ-10-51)




அன்பிற்கினிய மக்களே!

உங்களுக்காக வாதாடவும் - போராடவும்
ஈ.பி.டி.பியின் அரசியல் பலத்தையும்
பேரம் பேசும் சக்தியை அதிகரிக்கவும்
வாக்களிப்பீர் சந்திரிகாவிற்கு!

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி




/71791/


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல்கால

# வன்செயல்களைகண்காணிக்க 2 பிரதிநிதிகள் நேற்று வருகை

யாழ்ப்பாணம். டிசெ. 15

தேர்தல் வன்செயல்களைக் கண்காணிப்பதற்கான நிலையத்தைச் சேர்ந்த (CMEV) டாக்டர் அர்ச்சுனா பராக்கிரம, எஸ். தேவா ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக யாழ். அரச அதிபர், உதவித் தேர்தல் ஆணையாளர், யாழ் பொலீஸ் அத்தியட்சகர் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடிய இவர்கள் இன்று நெடுந்தீவுக்குச் செல்லவிருக்கின்றனர்.

நேற்று யாழ் தபால் நிலையத்துக்குச் சென்ற இவர்கள் வாக்காளர் அட்டை விநியோகத்தைப் பார்வையிட்டனர்.

இதேவேளை இரு சர்வதேச பார்வையாளர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர். (ஐ-3-5)

# தேர்தல் காலப் பாதுகாப்புக்கு பொலீஸார் விரிவான ஏற்பாடு

கொழும்பு, டிசெ 15

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிவிசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன என்று தேர்தலுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்றும்—

ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களிலும் ஆயுதம் தாங்கிய இரண்டு பொலீஸார் பணிபுரிவர் என்றும்—

அத்துடன் இரண்டாயிரம் நடமாடும் பொலீஸ் பிரிவுகள் இயங்கவுள்ளதாகவும்— அவர் மேலும் தெரிவித்தார்.

ஒவ்வொரு தொகுதியிலும் அமைக்கப்படும் பொலீஸ் தேர்தல் பிரிவுகளின் மூலம் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படும்.

தேர்தலுக்கு முன்பும், பின்பும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்ந்து இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். [ஐ-க-3]


99 O/L ஆங்கில வினாப்பத்திரம்

விற்பனையாகிறது

கிடைக்குமிடம்:

பூபாலசிங்கம் புத்தகசாலை

போஸ்கோ புத்தகசாலை,

நல்லூர் சயலஸ் அக்கடமி.

(71782)



IIS

Jaffna, Sri Lanka

INSTITUTE OF INFORMATICS STUDIES

5,000

மாணவர்களுக்கான மாபெரும்

புலமைப்பரிசில் திட்டம்-2000

எமது நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் கணனிக்கல்விக்கான மேற்படி திட்டத்தில் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் ஆர்வம் காட்டி வருவதாலும், அதிபர்கள், பெற்றோர்கள் மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நாட்டின் தற்போதைய சூழ்நிலையினைக் கருத்தில் கொண்டு

விண்ணப்ப முடிவு திகதி 14-12-1999 இல் இருந்து 31-12 1999

வரை மேலும் இரு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

— இயக்குநர்

IIS

100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

[சி/10208]


## கடிதங்களை பெறுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 15

ஜனாதிபதித் தேர்தலில் கடமையாற்றவுள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் யாவும் யாழ் வலயக் கல்வித் திணைக்களத்தில் தெரிவத்தாட்சி அலுவலரால் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இன்று தொடக்கம் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கிடையில் நேரில் வந்து இந்தக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு சகல அதிபர்களையும் ஆசிரியர்களையும் யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-3-10)

### தாழையடி...

[முதலாம் பக்கத் தொடர்]

யுதபிள்ளை யாழ். அரச அதிபருக்கு நேற்று கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்தார்.

ஷெல் தாக்குதல் மற்றும் யுத்த சூழ்நிலையினால் வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்துள்ள இம் மக்கள் செம்பியன்பற்றுக்கு செல்வதற்கு முயன்ற போது சீருடையினர் இவர்களைத் தடுத்து நிறுத்தியதாக அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ-5)


இன்றைய ஓடியோ CD வெளியீடு!

S. A. ராஜ்குமாரின் இசையில்

✠ பாட்டாளி

✠ காதலர் சங்கீத

மூர்த்தி வீடியோ சென்ரர்

மானிப்பாய்.

T. P. No.- 2884

(சி/10210)


# பட்டதாரி, தொண்டர் ஆசிரியர்கள் நியமனம் ஜனவரி 3 ஆம் திகதி முதல்

அம்பாறை, டிசெ. 15

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரிபவர்களில் 567 பேரை அடுத்த மாதம் 3 ஆம் திகதியிலிருந்து நிரந்தரமாக்கும் கடிதங்கள் இன்று முதல் அனுப்பப்படவிருக்கின்றன.

வடக்கு-கிழக்குமாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் இத்தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் 435 பேரும் கல்முனை மாவட்டத்தில் 132 பேரும் நிரந்தரமாக்கப்படவிருப்பதாகவும்—

ஜி.சீ.ஈ (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கே நிரந்தர நியமனம் வழங்கப்படுவதாகவும்—

அவர் மேலும் சொன்னார்.

அத்துடன் 162 பட்டதாரிகளுக்கு பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர் நியமனம் அடுத்த மாதம் 3 ஆம் திகதி முதல் வழங்கப்படவிருப்பதாகவும்—

மேலும் 817 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை அடுத்த மாதத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் — கல்வி அமைச்சின் செயலாளர் உதயன் அம்பாறை செய்தியாளருக்கு நேற்றுத் தெரிவித்தார். [அ-14-3]

### கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்)

பதில் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் 11 உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும்—

அவர்களின் சடலங்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன என்றும்—

பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அதேவேளை—

இந்த முகாம் தாக்கப்பட்ட சமயம் அப்பகுதியில் அமைந்துள்ள விமானப்படைமுகாம் மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்—

ஆனால் சேதங்கள் ஏற்படவில்லை என்றும் — கூறப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த வாகரைப் பிரதேசம் அண்மையில் படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் கிரிமிச்சைப் பகுதியில் படைமுகாம் நிறுவப்பட்டது. அந்த முகாமே இப்போது புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. [ஐ-3-21]

### 350 பொதுமக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

500 பேர் வவுனியா செயலகத்தில் பதிவு செய்திருந்த போதிலும் நேற்று 350 பேரே அனுப்பப்பட்டதாகவும்—

மற்றுமொரு தொகுதியினர் நாளை அங்கு அனுப்பப்படஇருப்பதாகவும்—

தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை—

மேலும் 20 லொறிகளில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் இன்று இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு அனுப்பப்படவிருக்கின்றன. (ஐ-3-164)

### தென்பகுதி...

[முதலாம் பக்கத் தொடர்]

அமைச்சு மற்றும் யாழ். படைத் தலைமையகம் ஆகியவற்றிடம் வேண்டுகோள்களை விடுத்திருந்தனர்.

சுகாதார அமைச்சின் அனுமதி கிடைத்ததை அடுத்து இவர்கள் நேற்றுக் கொழும்பு பயணமாகியதாகத் தெரிய வந்தது.

(ஐ-7-5-9-15-109-173)

### புலிகள் — புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்)

உறுப்பினரான இராசையா சற்குணநாதன் என்பவரும்—

கன்னக்குடாவைச் சேர்ந்த மாணிக்கம் சிவகுமார் (வயது 40), வேல்முருகு அருளம்மா (வயது 45) ஆகியோரும்—

உயிரிழந்தனர்.

புளொட் அமைப்பைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர். (ஐ-3-21)

# தேவாலயம் சென்று மதகுருவை மிரட்டிய ஆயுதபாணிகள் குழு

## கட்டைவேலியில் ஞாயிறன்று சம்பவம்

நெல்லியடி, டிசெ 15

வடமராட்சி கட்டைவேலியில் உள்ள மெதடிஸ்த திருச்சபைத் தேவாலயத்துக்குள் புகுந்த ஆயுதபாணிகளான குழுவினர் அங்கிருந்த தேவாலய குருவையும் அவரது குடும்பத்தினரையும் கொலை செய்யப்போவதாக மிரட்டியுள்ளனர்.

கடந்த ஞாயிறன்று மாலை 4.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

கைக்குண்டுகளை வைத்திருந்த எண்மர் அடங்கிய குழுவினரே தேவாலய வளாகத்தினுள் புகுந்து தேவாலய குருவான பி.ஜே. மேதரையும் அவரது மனைவி பிள்ளைகளையும் கொலை செய்யப்போவதாக மிரட்டியதுடன் அவர்களுடன் கடும் வாக்குவாதத்திலும் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயுதபாணிகளுக்கும் குருவானவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தினால் அச்சமடைந்த குருவானவரின் மனைவியான (மந்திகை மருத்துவ மனையின் பல் வைத்திய நிபுணர்) திருமதி ஸ்ரெலா மைதிலி, (வயது 37) என்பவரும் வெளியே ஓடி வந்து இளைஞர்களுடன் வாக்குவாதம் செய்திருக்கின்றார். அவ்வேளை உனது இரண்டு வயதுப் பிள்ளை எங்கே அவனைக் கொண்டுவா என்றும் சர்ச்சையில் ஈடுபட்டனராம்.

சுமார் 45 நிமிட நேரம் அங்கு நின்று உனது கணவனையும் பிள்ளையையும் காலை செய்யப் போகிறோம்'' என்று கூறி மிரட்டி உள்ளனர்.

இச்சம்பவம் குறித்துத் தகவலறிந்த கலிகை இராணுவத்தினர் ஆலயத்தை நோக்கி வந்தபோது ஆயுதபாணிகள் செய்வதறியாது மதிலால் ஏறிப் பாய்ந்து ஓடித்தலைமறைவாகினர்.

இவர்கள் தப்பி ஓடும்போது தாம் கொண்டு வந்த கைக்குண்டுகளில் ஒன்றையும், சைக்கிள் ஒன்றையும், குடை ஒன்றையும் அங்கு விட்டுச் சென்றுள்ளனர். பின்னர் அப்பகுதிக்கு வந்த கலிகை இராணுவ முகாமைச்சேர்ந்த படையினர் அவற்றை மீட்டுச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக தென்னிந்தியத் திருச்சபையின் கொழும்பு தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. [ஐ-109]

### புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

மூலம் அறிவித்தனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ ரவிஅப்பா [முனியாண்டி மதியழகன் — மன்னார்]

★ பாவண்ணன் [கதிரவேற்பிள்ளை ஜெயகாந்தன் — யாழ்ப்பாணம்]

★ மேஜர் சேஸ்வரன் அல்லது தமிழ்நெஞ்சன் [வல்லிபுரம் இராஜேந்திரன் — மட்டக்களப்பு]

★ இன்னரசி [கந்தசாமி சேதுமதி — யாழ்ப்பாணம்]

★ சிவமோகன் [சதாசிவம் கிருபாகரன் — மட்டக்களப்பு]

★ அகிலநாதன் [வேல்முருகு சபாநாயகம் — மட்டக்களப்பு]

★ 2 ஆம் லெப். நல்லந்தன் [அந்தோனி செல்வநாயகம்— கிளிநொச்சி]

★ ஈழத்தரசன் [முருகையா கேதீஸ்வரன் — கிளிநொச்சி]

★ ஆராதனா [பாலசுப்பிரமணியம் சந்திரவதனி — பூநகரி]

★ காஞ்சினி [சுப்பிரமணியம் அன்னலஷ்மி — மட்டக்களப்பு]

★ வான்மதி [சிவசுப்பிரமணியம் மாக்கிரட் நிவேதிதா — யாழ்ப்பாணம்]

★ கோசலா [வேல்மணி செல்வமலர் — அம்பாறை]

★ காந்தரூபன் [கந்தசாமி சதீஸ்குமார் — மட்டக்களப்பு]

★ காதம்பரி [விக்டர் அற்புதநாயகி — யாழ்ப்பாணம்]

★ பாரதி அல்லது இன்பன் [குலசேகரம் குகன் — யாழ்ப்பாணம்]

★ வாணன் [விக்னேஸ்வரன் அஜந்தன் — மல்லாவி]

★ புனிதன் அல்லது புமிலன் [நாகரத்தினம் கஜன் — யாழ்ப்பாணம்]

எல்லைப் படை வீரர்கள்

★ சதாசிவம் மகாகுமணன் அல்லது நாயன் [புதுக்குடியிருப்பு]

★ தங்கராசா தவராசா பெரியதம்பி [புதுக்குடியிருப்பு]

★ பிள்ளையான் சந்திரன் [மட்டக்களப்பு]

(ஐ-8)

## சூட்டுக் கொலை

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச கிராம சேவையாளர் மார்க்கண்டு தங்கராசா நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை வேலைக்குச் சென்ற இவரைக் காணவில்லை என்று பிரதேச செயலரிடம் அவரது மனைவி முறையிட்டதாகவும் —

நேற்று அதிகாலை கை கட்டிய நிலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் அவரது சடலம் விநாயகபுரம் என்ற இடத்தில் காணப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

### ஆனையிறவு...

(முதலாம் பக்கத் தொடர்)

கப்பட்டது.

இந்த நடவடிக்கையில் பத்துப்படையினர் உயிரிழந்தனர் என்றும், 28 படையினர் காயமடைந்தனர் என்றும்— கூறப்பட்டது.

நேற்றைய சண்டையில் 200 க்கும் அதிகமான விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர் என்றும் பாதுகாப்புத் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

'ஓயாத அலைகள் 3' நடவடிக்கை மூலம் தம்மால் கைப்பற்றப்பட்ட ஆனையிறவுக்குக் கிழக்கே உள்ள பிரதேசத்தில் நிலைகளைப் பலப்படுத்தி வருவதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றுடன் 43-ஆவது நாளாகத் தொடரும் ஓயாத அலைகள்-3' நடவடிக்கை மூலம் வன்னியின் பெரும் பகுதிகளையும் ஆனையிறவுப் பெரும்தளத்தின் கிழக்குப் புறப்பாதுகாப்புப் பிரதேசத்தையும் தாம் கைப்பற்றியுள்ளதாகவும் புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-க-3-8)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15-12-1999 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org